Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

இல: 339 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி மார்கழி 17 ஆம் நாள் ஷஃபான் பிறை 26 (31-12-64) வியாழக்கிழமை இதழ் 322

**மில்க்வைற் ஸ்தாபனத்தாரின் அன்பான வேண்டுகோள்**

(முக்கியமாக விளம்பரம் நாடிவருவோர்கள் கவனத்திற்கு)

மேற்படி ஸ்தாபனத்தில் 1965-ம் ஆண்டு தொடக்கம் எவ்வகையான (புத்தகம், மலர்கள்,) விளம்பரங்களும் கொடுக்கமாட்டோம். காரணம் இதற்கான நிதி தற்சமயம் விற்பனை வரிக்குப் போவதேயாகும்,

மன்னிக்கவும்!

இங்ஙனம்
நிர்வாகஸ்தர்

மன்னார் பகுதியில்

# 200 குடும்பங்களை தேடும் முயற்சி நீடிப்பு

## அவர்களின் கதி குறித்து இன்னும் தெரியவில்லை

கொழும்பு, புதன்

அண்மையில் ஏற்பட்ட பயங்கர சூருவளியினால் பாதிக்கப்பட்ட மக்களைக் கண்டுபிடிக்கும் வேலைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. மன்னார் பகுதியைச் சேர்ந்த இரணைதீவு வடக்கு, தெற்கு தீவுகளிலிருந்த 200 குடும்பங்களை தேடும் முயற்சி துரிததமாகமேற்கொள்ளப்பட்டுவருகிறது.

சூருவளியினால் பாதிக்கப்பட்டு அழிந்த நகரம் போல் காட்சியளிக்கும் திருக்கோணமலையில் நிவாரண உதவி வேலைகளிலும், மீட்பு வேலைகளிலும் இராணுவத்தினரு, கடற்படையினரும் ஈடுபட்டுள்ளனர்.

மன்னாரிலிருந்து 20 மைல் தூரத்திலுள்ள இரணைதீவு வடக்கு, தெற்கு தீவுகளில் சூருவளியினால் பாதிக்கப்பட்ட மக்களை தேடும் முயற்சி தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டுவருகின்றன. இந்தத் தீவுகளில் வசித்த 200 குடும்பங்களைத் தேடும் முயற்சிகள் தீவிரமாக நடைபெறுவதாக அறிவிக்கபபடுகிறது

(6-ம் பக்கம் பார்க்க)

---

'ஈழநாடு'

## சூருவளி கஷ்ட நிவாரண நிதி

### யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச்சங்கம் ரூபாய் 2000 வழங்கியது

சூருவளியின் கோரத் தாண்டவத்தினால் பாதிக்கப்பட்டு நிர்க்கதியாக நிற்கும் நம்மக்களுக்கு உதவிபுரியும் பொருட்டு 'ஈழநாடு' ஆரம்பித்துள்ள சூருவளி நிவாரணநிதிக்கு அன்பர்கள் மனமுவந்து தாமாக தம்மால் இயன்ற பணஉதவிசெய்து வருகின்றனர். எனினும் நமது சகோதரர் பலருக்கு நேர்ந்துள்ள துன்பத்தை மற்றையோர் அறியவில்லையோ அறிந்தும் உணரவில்லையோ என்று நாம் நினைத்த நேரத்தில் யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச்சங்க நிர்வாகிகள் 2000 ரூபாய் நிவாரணஉதவி அளித்து எமது கருத்தை மாற்றிவிட்டனர். ஐக்கிய வியாபாரச் சங்கத்தினரின் தாரான குணத்தை மற்றும் அன்பர்களும் பின்பற்றுவார்களென நம்புகிறோம். உங்கள் நன்கொடையை

"புயல் கஷ்டநிவாரண நிதி"
"ஈழநாடு", த. பெ. 49, யாழ்ப்பாணம்

என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும். வசூல் விவரங்களை அவ்வப்போது பத்திரிகையில் வெளியிடுவோம்.

சூருவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிபுரியுமுகமாக கொழும்பு கோட்டடி வீதியிலுள்ள 'ஜாஸ்மின் டெக்ஸ்டைல்ஸ்' ஸ்தாபன அதிபர் திருமதி வி. சண்முகநாயகம் ஏழு படுக்கை விரிப்புக்களையும் 23 சேலைகளையும் 4 சாரங்களையும் 'ஈழநாடு புயல் நிவாரண நிதிக்கு அனுப்பிவைத்துள்ளார்.

நேற்றைய 'ஈழநாடு' பத்திரிகையில் ஏ. எஸ். சிவலிங்கம் என்ற அன்பர் ஐந்து ரூபாய் அளித்ததாக வெளிவந்திருந்தது. அவர் 20 ரூபாய் அளித்தார். தவறு நேர்ந்தமைக்கு வருந்துகிறோம்,

முன்னர் கிடைத்த தொகை: ரூபா 1583-00

நேற்று நிதியளித்தவர் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம் | 2000-00 |
| எஸ். சூரசங்காரம் (வழக்கறிஞர்) | 101-00 |
| எஸ். எஸ். தில்லையம்பலம், சண்டிலிப்பாய் | 5-00 |
| சி. ஆறுமுகம், உடுவில்வீதி, மானிப்பாய் | 5-00 |
| என். சுப்பிரமணியம், கீரிமலை | 15-00 |
| வி. கதிரவேலு, கீரிமலை | 2-00 |
| ஓர் அன்பர் தொல்புரம் | 10-00 |
| ஓர் அன்பர், உடுவில் | 10-00 |
| கா. பொ. இரத்தினம் | 10-00 |
| இ. சோமலிங்கம், கே. கே. எஸ். வீதி | 10-00 |
| டாக்டர் கே. கனகரத்தினம், கந்தர் மடம் | 150-00 |
| டாக்டர் எஸ், ராஜரத்தினம், நெல்லியடி | 50-00 |
| ஓர் அன்பர், சாவகச்சேரி | 30-00 |
| எஸ், சாந்தி, வண்ணார்பண்ணை | 10-00 |
| எம். ஜி. ஆர். ரசிகர் வியாபாரிமூலை | 5-00 |
| வி. சிவசம்பு ஆச்சாரி, வண்ணார்பண்ணை மேற்கு | 5-00 |
| வி. தியாகராஜா, வல்வெட்டித்துறை | 7-25 |
| கே. வி. தம்பு, முனீஸ்வர கபே, யாழ்ப்பாணம் | 50-00 |
| விநாயகம் இன்டஸ்றீஸ், மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம் | 25-00 |
| எஸ். பூபதி, ரேடியோ லைன்ஸ், யாழ்ப்பாணம் | 13-00 |
| வி. கே. முருகேசு அன் சன்ஸ் | 2-00 |
| எஸ். கந்தசாமி, 305, கே.கே.எஸ். ரோட், யாழ்ப்பாணம் | 10-00 |

---

## மாநகரசபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாநகர சபையின் விசேஷ கூட்டம் மேயர் திரு. எஸ். சி. மகாதேவா தலைமையில் நேற்று மாலை நடைபெற்றபோது 65ம் ஆண்டு வரவு செலவுத் திட்டம்பற்றி ஆராயப்பட்டது.

ஒவ்வொரு வட்டாரங்களுக்கும் மலசலகூடத்திற்காக 2000 ரூபாவும், வடிகால்வாய்களுக்கு 5000 ரூபாவும் ஒதுக்குவதென்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஈச்சமோட்டை வட்டார அங்கத்தவர் திரு. அல்பிரட்துரையப்பாவைத்தவிர ஏனைய அங்கத்தவர்கள் யாவரும் இந்த வரவு செலவு கூட்டத்தில் கலந்துகொண்டார்கள்.

---

## இலங்கை வங்கி ஒருலட்சம் நன்கொடை

கொழும்பு, புதன்

அரசாங்க சூருவளி நிவாரண நிதிக்கு இலங்கை வங்கி ஒரு லட்சம் ரூபா நன்கொடை வழங்கியுள்ளது, இன்றுவரை அரசாங்கத்தின் நிதியில் இரண்டு லட்சம் 25,000 ரூபா சேர்ந்துள்ளது,

அரசாங்க சூருவளி நிதிக்கு தங்களது ஒருநாள் சம்பளத்தை அன்பளிக்க தங்களது அங்கத்தவர்கள் விருப்பம் கொண்டுள்ளதாக பல தொழிற் சங்கங்கள் பிரதமரிடம் தெரிவித்துள்ளன

---

## இந்தியா முழுதும் நூற்றுக்கணக்கான மார்க்ஸியவாதிகள் கைது

### ஏ. கே. கோபாலன், ராமமூர்த்தி பல சட்டசபை உறுப்பினர்கள்

புதுடில்லி, டிச. 30

இந்தியாவின் பல பகுதிகளிலும் இன்று அதிகாலை நூற்றுக்கணக்கான மார்க்ஸிய கம்யூனிஸ்ட் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஸ்ரீ ஏ. கே. கோபாலன், திரு. ராமமூர்த்தி, ஸ்ரீ பஸவாபொன்னையா, ஸ்ரீ சுந்தரையா உட்பட 116 பேர் இன்று அதிகாலை கேரளத்தில் கைது செய்யப்பட்டனர்.

ஆந்திர பிரதேசத்தில்பார்லிமெண்ட் உறுப்பினர் திரு நாராயணசாமி, திரு. ஹனுமக்ராவ், 2 எம். எல். ஏ. க்கள் உட்பட 12 பேர் கைது செய்யப்பட்டனர். தமிழ் நாட்டில் 19 பேர் கைதாயினர்.

அஸ்ஸாம், உத்தர பிரதேசம் ஆகிய ராஜ்யங்களிலும் பலர் கைதானார்கள்.

மேற்கு வங்காளத்தில் பல சட்டசபை உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டனர்.

நாகபுரி, ஜயப்பூர், கட்டாக் ஆகிய இடங்களிலும் பலர் கைது செய்யப்பட்டனர்.

---

## ரஷ்ய செஞ்சிலுவை சங்கத்தின் உதவி

மாஸ்கோ, டிச. 30

இலங்கையில் சூருவளியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுமுகமாக ரஷ்ய செஞ்சிலுவைச் சங்கம் மருந்துவகைகளும், உணவு, துணி வகைகளும் அனுப்ப முன் வந்துள்ளது. இலங்கை செஞ்சிலுவை சங்கத்திடம் இது பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## இடமாற்றங்கள் இருக்காது?

கொழும்பு, புதன்

சூருவளியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த அரசாங்க ஊழியர்களின் இடமாற்றங்கள் குறித்து அரசாங்கம் பரிசீலனை செய்துவருகிறது இப்பகுதியிலுள்ள அரசாங்க ஊழியர்கள் விரும்பும் பட்சத்தில் அவர்களின் இடமாற்றத்தை ஒத்திவைக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளும்

திரு வி கோடீஸ்வரன் தலைமையில் ஒரு தூதுகோஷ்டி திறைசேரி உதவிக் காரியதரிசியைச் சந்தித்து இடமாற்றம் ஒத்திவைப்பு குறித்து வற்புறுத்தியதைத் தொடர்ந்தே மேற்கண்ட விபரம் தெரிவிக்கப்பட்டது திறைசேரி உதவிக் காரியதரிசி திரு அமரசிங்கா இதுபற்றி தெரிவிக்கையில் சூருவளியினால் பாதிக்கப்பட்ட இடங்களைச் சேர்ந்த அரசாங்க ஊழியர்கள் மேலும் சிறிது காலம் இந்தப் பகுதியில் தொடர்ந்து சேவையாற்ற விரும்பினால் உடனடியாக அவர்கள் தங்களது இலாகா அதிபருக்கு அறிவிக்கவேண்டும் என்று கூறினார்.

---

கொழும்பு, புதன்

சூருவளியினால்பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவரணமளிகக பல வெளிநாடுகள் முன்வந்துள்ளன. ஆனால் தேவையானவை என்ன என்பதுபற்றி இலங்கை அரசாங்கம் இன்னமும் தெரிவிக்கவில்லையென அறியப்படுகிறது.

மகா வாக்கு

மனிதருக்குச் சேவை செய்வதன் மூலம்கடவுளைக் காண நான் முயன்றுவருகிறேன். ஏனெனில் கடவுள் வானத்திலோ, அல்லது கீழே பூமிக்கடியிலோ இல்லையென்பதையும் ஒவ்வொரு உயிரிலுமுள்ளாரென்பதையும் நான் அறிவேன்.

—மகாத்மா காந்தி

ஈழநாடு
EELA NADU

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு மார்கழி மீ 17 உ. (31-12-64)

## வெளிநாட்டு உதவி

சிலமணி நேரம் வீசிய சூறாவளியின் கோரத் தாண்டவத்தின் விளைவுகளைப்பற்றிய செய்திகள் இன்னும் வந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் சூறாவளியினால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட சேதங்களைப்பற்றிய சரியான விபரம் இப்பொழுது கிடைக்குமென எதிர்பாக்க முடியாது. என்றாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணஉதவி அளிக்கும் அதே சமயம் அவர்களுக்குப் புனர்வாழ்வளிப்பதற்கான முயற்சிகளிலும் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சூறாவளியினால் ஏற்பட்ட சேதங்கள்பற்றி இதுவரை கிடைத்த தகவல்களைக் கொண்டு யாழ்ப்பாண அரசாங்க அதிபர் விரிவான அறிக்கையொன்றை அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்திருக்கிறார். நெற்பயிர், வெங்காயச் செய்கை, வாழைத் தோட்டங்கள் ஆகியவைகளுக்கு ஏற்பட்ட அழிவினாலும் மோட்டார் இயந்திரப் படகுகளை இழந்ததன் மூலமும் சுமார் மூன்று கோடியே பதினைந்து லட்சம் ரூபாய் நஷ்டமேற்பட்டுள்ளதென்று அரசாங்க அதிபர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார். நூறு மீனவர்கள் உயிர்நீத்ததன் காரணமாக மீன்பிடித் தொழிலுக்கு ஏற்பட்டுள்ள பெரும் நஷ்டத்தையும் வெங்காயச் செய்கை அழிந்ததால் வெங்காயம் இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் நேர்ந்துள்ளதென்றும் மீன், வெங்காயம் இறக்குமதியால் அந்நிய செலாவணியை மேலும் உபயோகிக்க வேண்டியேற்படுமென்றும் அரசாங்கஅதிபர் தெரிவித்திருக்கிறார். வெங்காயச்செய்கை மட்டுமல்ல நெல் மற்றும் இதர பயிர்களுக்கும் அழிவு ஏற்பட்டுள்ளது. பயிர்கள அழிந்தாலும் பணமும் உழைப்பும் செலவிட்டால் மீண்டும் செய்கை பண்ண முடியும். ஆனால் சூறாவளி பயிர்களை அழித்ததுடனில்லாதுபல இடங்களில் கடல் கொந்தளிப்பினால் பயிர்ச் செய்கைக்குரிய நிலங்களில் உவர்நீர் நிறைந்து இன்னும் சில ஆண்டுகளுக்கு பயிர்ச்செய்கைக்கு உதவாமல் செய்துள்ளது. எனவே பயிர் அழிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரண

உதவி வழங்கும் அதே சமயம் நிலத்தை மீண்டும் பயிர்ச் செய்கைக்கு பயன்படுத்துவதற்கு ஏற்ற வழிவகைகளையும் செய்துகொடுக்க முன்வர வேண்டும். அதுவரை அவர்கள் உயிர் வாழவும் உதவி புரியவேண்டியது அவசியம். விவசாயிகளுக்கு மட்டுமல்லாது மீனவர்களின் குடும்பங்களுக்கும் புனர்வாழ்வளிப்பதற்கான நீண்டகாலத் திட்டங்களை அரசாங்கம் உருவாக்கி அதைச் சரியான முறையில் செயல்படுத்த வேண்டியதும் அவசியமாகும்.

மீனவர்களின் இழப்பினால் ஒரு பரம்பரையே அழிந்து விட்டதென்றும் மற்றொரு பரம்பரையை உருவாக்குவதென்பது சுலபமல்லவென்றும் அரசாங்க அதிபர் தமது அறிக்கையில் சரியாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார். மீன்பிடித் தொழிலைமீண்டும் இக்கிராமங்களில் புனரமைப்பதற்கு ஒன்றரைக் கோடி ரூபாய் செலவாகும் என்றும் வெளிநாட்டு உதவி கோரலாமென்றும் அவர் நல்ல யோசனை தெரிவித்திருக்கிறார்.

இலங்கையில் சூறாவளியினால் பெரும் சேதமேற்பட்டிருக்கிறதென்று செய்தி கிடைத்ததும் வெளிநாடுகள் தங்களது உதவி தேவையாவெனக் கேட்டிருந்தன. உதவிசெய்ய முன்வந்துள்ள நாடுகளின் உதவியைப் பெற்று மீன்பிடித் தொழிலை மட்டுமல்லாது இதர தொழில்களுக்கும் ஊக்கமளித்துச் சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் புனர்வாழ்வளிக்கலாம். அரசாங்கம் இதுவிஷயத்தில் கவனம் செலுத்துமென்று எதிர்பார்ப்போம்.

# அரசியல் புயலும், சூறாவளியும் நிறைந்த 1964-ம் ஆண்டு

## இன்றுடன் முடியும் வருடத்தின் முக்கிய சம்பவங்கள்

இன்றுடன் முடிவடையும் 1964-ம் வருடம் நாட்டின் அரசியலில் புயல் வீசி பெரும் மாற்றங்களைச் செய்ததுடன் வருட முடிவில் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் சூறாவளி வீசி உயிர்களையும் உடைமைகளையும் அழித்துள்ளது.

### ஜனவரி

ஜனவரி 1- இலங்கையில் தமிழ் மக்கள் வதியும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 1956ல் இயற்றப்பட்ட தனிச்சிங்கள சட்டப்பிரதிகள் பிரமாண்டமான மக்கள் முன்னிலையில் தீயிடப்பட்டன. யாழ்ப்பாணத்தில் பூரண ஹர்த்தால் நடைபெற்றதுடன், ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றின்பின் அமைதியான முறையில் கச்சேரி வாசலில் வைத்து சிங்களச் சட்டப்பிரதி தீவைக்கப்பட்டது. மட்டக்களப்பு, மன்னார், திருகோணமலை ஆகிய இடங்களில் கனத்த மழை பெய்த பொழுதிலும், ஆர்ப்பாட்ட ஊர்வலங்களில் பெருந் திரளான மக்கள் கலந்துகொண்டு, சட்டப்பிரதிக்கு தீவைக்கப்பட்டது.

சிங்களம்மட்டும் சட்டம் நாடு முழுவதும் அமுல் நடத்தப்பட்டது. இன்று எண்ணெய் ஸ்தாபனங்கள் தேசிய மயமாகின, பெட்ரோலிய வர்த்தகமும் தேசியமயமாக்கப்பட்டது.

பாணந்துறையில் ஏற்பட்ட படகு விபத்தில் 8 பேர் உயிர் துறந்தனர்.

ஜனவரி 3- யாழ்ப்பாணத்தில் 17 அரசாங்க ஊழியர்கள் ராஜினமாச் செய்தனர்.

ஜனவரி 4- நிக்கவரட்டியாவில் நடைபெற்ற பாராளுமன்றஇடைத்தேர்தலில் யு. என் பி. அபேட்சகர் திரு. கவிசேன ஹேரத் வெற்றிபெற்றார்.

இணைப்பாறிய கல்வி அதிகாரியும், சரித்திர ஆராய்ச்சி எழுத்தாளருமான திரு. எஸ். ஜே. குணசேகரா காலமானர்.

ஜனவரி 9- இலங்கை அரசியல் சட்டத்தைத் திருத்த கமிட்டி ஒன்று நியமிக்கவேண்டுமென சபைத் தலைவர் திரு. சி. பி. டி' சில்வா கொண்டு வந்த பிரேரணை பார்லிமெண்டில் வாபஸ் பெறப்பட்டது.

ஜனவரி 12- 'ஈழத்தின் தமிழ்த் தாத்தா' டாக்டர் பி. சுப்பிரமணியம் காலமானர்.

மூன்று மாதங்களாக நடைபெற்ற கொழும்புத் துறைமுக ஊழியர் வேலைநிறுத்தமும், 12 நாட்களாக நடைபெற்ற இலங்கை வர்த்தக சிப்பந்திகள் வேலைநிறுத்தமும் கைவிடப்பட்டு தொழிலாளர்கள வேலைக்குத் திரும்பினர்.

ஜனவரி 18- பொரளைத் தொகுதி இடைத் தேர்தலில் சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த திருமதி விவியன் குணவர்த்தன வெற்றிபெற்றார்.

ஜனவரி 26- விவசாயிகள் ஊர்வலத்தை கலைத்ததற்காக உண்ணுவிரதமிருந்த திரு முதியான்சே தென்னக்கூன் தமது ஆறுநாள் உண்ணுவிரதத்தைக் கைவிட்டார்.

### பெப்ரவரி

பெப்ரவரி 9- பண்டாரநாயக்கா கொலை விசாரணைக் கமிஷன் கூடியது.

பெப்பரவரி 10- யாழ்ப்பாணத்தில் பெட்ரோல் தாங்கியில் தீப்பிடித்து, தீவிபத்து ஏற்பட்டது.

பெபரவரி 12- யாழ்ப்பாணம் மாநகரசபையின் முன்னுள் மேயர் திரு. சாம் சபாபதி காலமானர்.

பெப்ரவரி 13- கனேவத்தைக்கருகில் ரயில் தடம்புரண்டது.

பெப் 16- தமிழரசுக்கட்சித் தலைவர்களுக்கும் நீதி மந்திரி திரு. ஜி வி டி. ஏ. சில்வாவுக்குமிடையே தமிழ் மக்களின் உரிமை பற்றி பேச்சுவார்த்தை.

பெப். 17- வர்த்தக மந்திரி திரு. ரி. பி. இலங்கரத்னவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட தேர்தல் மனு மீண்டும் கீழ்க்கோர்ட்டில் விசாரணை செய்யப்பட வேண்டும் என மூன்று நீதிபதிகளைக் கொண்ட அப்பீல் கோர்ட் உத்தரவிட்டது.

பெப். 22- கங்கொடவிலவிலுள்ள வித்தியோதய பல்கலைகழகத்தில் பௌத்த பிக்குகளுக்கும் சாதாரணமாணவர்களுக்குமிடையில் ஏற்பட்ட பலத்த கைகலப்பில் பலர் காயமடைந்தனர்.

பெப். 26- சீனப்பிரதமர் சூ-என்-லாய் கொழும்பு வந்தார்.

இலங்கையின் சகல பாகங்களிலும் உள்ள வைத்திய நிபுணர்கள் 160 பேர் வேலைநிறுத்தம்.

### மார்ச்

மார்ச் 2- பெட்ரோலியம் கூட்டுறவு ஸ்தாபனத்தின் புதிய தலைவராக திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை நியமனம்.

மார்ச் 5- டாக்டர்கள், என்ஜினியர்கள் வேலைநிறுத்தம், அவசரகாலச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டது.

மார்ச் 6- மின்சார என்ஜினியர்கள் வேலைக்குத் திரும்பினர்.

மார்ச் 7- வைத்திய நிபுணர்கள் வேலைக்குத் திரும்பினர்.

மார்ச் 12- பண்டாரநாயக்கா கொலை விசாரணைக் கமிஷன் முன் முன்னுள் பிரதம மந்திரி டாகா சாட்சியம்.

மார்ச் 15- அணுசக்தி விஞ்ஞானி கர்தையாவுக்கு உடுபிட்டியில் வரவேற்புபசாரம்.

மார்ச் 17- யாழ்ப்பாணத் துறைமுகத்தில் உணவு இறக்குமதி செய்ய வந்த கப்பல் தீப்பிடித்தது.

மார்ச் 19- முன்னுள் மாவட்ட நீதிபதி திரு. ஸ்பென்ஸர் இராஜரத்தினம் கதிர்காமத்தில் குத்திக்கொலை.

மார்ச் 24- யாழ்ப்பாணத்தின் தவயோகி யோகசுவாமி சிவபதமடைந்தார்.

### ஏப்ரல்

ஏப். 9- உருத்திரபுரம் கோயில் ஐயர் கொலை வழக்கில் இரு எதிரிகள் ரூபா 10,000 பிணையில் செல்ல அனுமதி.

ஏப். 10 பசுக்களை இறைச்சிக்கு வெட்ட அனுமதிப்பதில்லை என யாழ். மாநகர சபைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

ஏப். 18- கவர்னர் ஜெனரலுக்கு சத்திர சிகிச்சை.

ஏப். 24- திரு. கோடீஸ்வரன் வழக்கு வெற்றி. சிங்களச்சட்டம் அரசியல் சட்டத்துக்கு முரணனதுஎனத்தீர்ப்பு

ஏப். 26- மருதனமடத்தில் மூவர் சுட்டுக்கொலை.

### மே

மே. 15- கோடீஸ்வரன் வழக்கு அப்பீல் தீர்ப்பு வெளியாகும் வரை உத்தியோக மொழி அமுல் திட்டத்தை நிறுத்திவைக்க வேண்டுமென்ற அட்டர்னி ஜெனரலின் ஆலோசனையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது.

### ஜூன்

ஜூன் 8- ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சி அரசாங்கத்துடன் கூட்டுச்சேர்வதைஎதிர்த்த (புரட்சி பிரிவு) சமசமாஜக் கட்சியினர் புதிய கட்சியொன்றை அமைத்தனர்.

ஜூன் 10- புரட்சிச் சதிவழக்கில் 28-ம் எதிரியான திரு. ஜாக்ஸன் விடுதலை.

சுதந்திரக்கட்சி—சமசமாஜக் கட்சி கூட்டு மந்திரிசபை பதவியேற்றது.

ஜூன் 22. யாழ்ப்பாணம் வட்டார விஸ்தரிப்பு சம்பந்தமாக விசாரணைகள் நடத்தும் பொருட்டு இன்று விசாரணைக் கமிஷன் கூடியது.

### ஜூலை

ஜூலை 2- ஐந்தாவது பார்லிமெண்டின் ஐந்தாவது கூட்டதொடரை கவர்னர் ஜெனரல் சம்பிரதாயப்படி ஆரம்பித்துவைத்தார்.

ஜூலை 5- காமன்வெல்த் பிரதமர்கள்மகாநாட்டில்கலந்து கொள்ள பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ லண்டன் புறப்பட்டார்.

ஜூலை 15- கூட்டரசாங்கத்தின் முதலாவது சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை 31 அதிகப்படியான வாக்குகளால் நிறைவேறியது.

ஜூலை 24- லண்டனில் நடைபெற்ற காமன்வெல்த் பிரத

(5-ம் பக்கம் பார்க்க)

## நாட்டிலும் நகரிலும்

கடந்த பத்து நாட்களாக பெரிய புயலொன்று அடித்துக்கொண்டிருக்கிறது. தென்றலும் கொண்டலும், சண்டமாருதமும் மலையமாருதமும், மழையும் புயலும் பிற்பகல் 5 மணி தொடக்கம் இரவு 11, 12 வரை சக்கைப்போடுபோடுகின்றன. இந்தச் சூறாவளியின் நாதம் உலகம் முழுவதுமே கேட்கிறது. ஆமாம், சென்னை நகரத்தில் வீசிக்கொண்டிருக்கும் இசைப் புயலைத்தான் குறிப்பிடுகிறேன்!

நல்ல வேளையாக, நம்மூரில் வீசிய கொடிய புயலைப் போல இதனால் சேதம் எதுவும் ஏற்படவில்லை. அதற்கு மாறாக, பட்டினியாய்க் கிடந்த பல செவிகளுக்கு இது இனிய உணவு கொடுத்திருக்கிறது.

சென்னையில் இந்நாட்களை 'சங்கீத ஸீஸன்' என்று குறிப்பிடுவார்கள். மியூஸிக் அகாடமி தமிழிசைச் சங்கம், தென்னிந்திய நுண்கலைக் கழகம் முதலிய சங்கீத சபைகள் இந்நாட்களில் பிரபல வித்வான்களைக் கொண்டு இசைக் கச்சேரிகளை நடத்துவிக்கும். இவற்றில் மேடையேறிக் கச்சேரி செய்யும் வாய்ப்புக் கிடைத்து விட்டால் அதுவே தம் வாழ்வின் சிகரம் என்று பல சங்கீதக்காரர் கருதுவார்கள்.

கச்சேரிகளை நேரில் போய்க் கேட்கும் வசதி இல்லாதவர்களுக்கு ஆகாஷ்வாணி உதவி செய்கிறது. ஏக காலத்தில் மூன்று நாலு இடங்களில் சிறந்த வித்வான்களின் கச்சேரி இருந்துவிட்டால் எதற்குப் போவதென்று தெரியாமல் ரசிகர்கள் திண்டாடுவார்கள். எந்தக் கச்சேரியை அஞ்சல் செய்வதென்று தெரியாமல் ஆகாஷ்வாணியும்திண்டாடும். இதற்காகத்தான் முந்திய வருடங்களில் கச்சேரிகளை முதல்நாள் ஒலிப்பதிவு செய்து மறுநாள் ஒலிபரப்பி வந்தார்கள். இதில் ஒரு சங்கடமிருந்தது ஒலிப்பதிவு யந்திரங்கள் தக்க சமயத்தில் ஒத்துழைக்க மறுத்து விட்டால் கச்சேரிகள் பாழாகி விடும். இதனால்தான் போலும், இவ்வருடம் கச்சேரிகள் நேரடியாக அஞ்சல் செய்யப்படுகின்றன.

ஆனாலும் இதிலும் ஒரு குறைபாடு இருக்கத்தான் செய்கிறது. பாட்டுகளைத் தனித்தனியாக ஒலிபதிவு செய்து மறுபடி ஒலிபரப்பும் போது என்ன பாட்டு, என்ன ராகம், என்ன தாளம் என்று அறிவிக்கும் வசதியிருந்தது. இம்முறை நேரடி அஞ்சல் என்றபடியால் இந்த விபரங்கள் ஒன்றும் அறிவிக்கப்படவில்லை. கச்சேரி செய்பவரின் பெயரும் பக்கவாத்தியக்காரரின் பெயர்களுமே அறிவிக்கப்பட்டன. இசைவிழா கச்சேரிகளை கேட்டு தங்கள் சங்கீத ஞானத்தை விருத்தி சய்ய விரும்பும் இசை பயிலுபவர்களுக்கு இது வருத்தத்தைக் கொடுக்கும். உதாரணமாக, செவ்வாய்க்கிழமை அன்று ஜி. என். பாலசுப்பிரமணியம் செஞ்சு காம்போதி என்ற அபூர்வ ராகத்தை, சிறிது நேரம் ஆலாபனைசெய்து 'வரராக' என்ற தியாகராஜ க்ருதியைப் பாடியபோது பலருக்கு அது என்ன ராகம் என்று தெரிந்திராது. தெரிந்து கொள்ள மிக ஆவலுடன் இருந்தவர்களுக்கு இது பெரிய ஏமாற்றமாயிருக்கும்.

இந்தக் குறையையும் நிவர்த்திசெய்ய மார்க்கமுண்டு. அநேகமாய் கச்சேரிகளில் ஒரு பாட்டு முடிந்து மற்றப் பாட்டு ஆரம்பிப்பதற்கு கடைசி ஒரு நிமிடமாவது செல்லும். பாட்டுக்காரர் தம்மை ஆசுவாசப் படுத்திக்கொள்வார், அல்லது பக்கவாத்தியக்காரர்கள் சுருதி சரிபிழை பார்த்துக்கொள்வார்கள். இந்த இடைவேளையில் சபைக்காரரின் ஒத்துழைப்

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலம் தொடர்ச்சி)

போடும் வித்வானின் உதவியோடும் பாட்டு விபரங்களை அறிவித்துப் போடலாம். ஆகாஷவாணியின் இதைப் பற்றி ஏன் சிந்திக்கவில்லை என்று ஆச்சரியமாயிருக்கின்றது. அடுத்த ஆண்டில் இக்குறை தவிர்க்கப்படுமென்று எதிர்பார்ப்போமா?

— "வழிப்போக்கன்"

# புயல் அகதிகளின் மறுவாழ்விப்புக்கு ரூ. 1 கோடி செலவிடப்படும்

## தமிழ் நாட்டுக்கு முதன்மந்திரி திரு. பக்தவத்சலம் அறிவிப்பு

### சேதுசமுத்திர திட்டத்திற்கு அடுத்தமாதம் அங்கீகாரம் கிடைக்குமென நம்பிக்கை

புதுடில்லி, டிச. 30

புயல், கடல்கொந்தளிப்பை அடுத்து தனுஷ்கோடிக் கரையில் 1500 சடலங்கள் ஒதுங்கியிருப்பதாக கொழும்பில் வெளியான செய்திகள்பற்றி இந்திய வட்டாரங்கள் ஆச்சரியம் தெரிவித்திருக்கின்றன, இது தவறு என அவை கூறின.

புதன்கிழமை சம்பவத்தில் 300 பேர் பலியாகியிருப்பதாக உத்தியோக பூர்வ விசாரணையிலிருந்து தெரியவருவதாயும் ஆனால் தமது சொந்தக் கருத்துப்படி 350 பேர்கள் பலியாகியிருக்கக்கூடும் என்றும் முதன் மந்திரி திரு பக்தவத்சலம் நேற்று சென்னையில் நிருபர்களிடம் கூறினர். கடலினால் அடித்துச் செல்லப்பட்ட ரயிலில் 115 பேர்கள் பலியாகியதும் இதில் அடங்கும் என அவர் கூறினர்.

மாண்டவர்களில் பெரும்பாலோர் மீனவர்கள் என்றும் இவர்களுக்கு மறுவாழ்வளிக்க ரூ. 65 லட்சம் தேவைப்படும் என்றும் பக்தவத்சலம் கூறினர்.

இராமேஸ்வரம் கோவிலில் தினமும் 1000 பேர்களுக்கு உணவளிக்கப்பட்டு வருவதாயும், மண்டபம் முகாமில் தினமும் 1600 பேர்களுக்கு உணவளிக்கப்படுவதாயும் முதன்மந்திரி கூறினர்.

சேதுசமுத்திரத் திட்டத்திற்கு அடுத்தமாதம் மத்திய அரசாங்கத்தின் அங்கீகாரம் கிடைக்கும் என நம்புவதாய் அவர் மேலும் கூறினர்.

மண்டபத்திலும் பாம்பனிலும் இரு கப்பல் துறைகள் கட்டப்படும் என்றும் அவற்றையடுத்து இரு சிறிய நகரங்கள் அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். தனுஷ்கோடி இனிலும் யாத்திரை ஸ்தலமாக விளங்குகிறது என்று கூறிய முதன்மந்திரி ராமேஸ்வரத்திலிருந்து தனுஷ்கோடிக்கு ஒருசாலை அமைப்பதுபற்றித் தாம் யோசித்து வருவதாயும் தலைமை என்ஜினியர் இதுபற்றி ஆராய்ந்து வருகிறார் என்றும் கூறினர்.

இதற்கிடையில் புயல்,கொந்தளிப்புப் பகுதியில் இந்திய கடற்படை, விமானப்படை தங்கள் நிவாரண வேலைகளை முடித்துவிட்டதாய் அறிவிக்கப்பட்டது.

யுதாண்ட், எலிஸபெத்அரசி, மேற்குஜெர்மன் அதிபர், பிரதமர், ஜோர்டான் மன்னர் ஆகியோர் ஜனாதிபதி ராதாகிருஷ்ணனுக்கு புயல் சேதம்பற்றி அனுதாபம் தெரிவித்திருக்கிறார்கள்.

## பாதுகாப்பு சபைக்கு மலேஷியா தெரிவு

நியூயோர்க், டிச. 30

ஐ நா. பாதுகாப்பு சபைக்கு மலேஷியா, ஹாலந்து, உருகுவே ஆகிய நாடுகள் வாக்கெடுப்பின்றி தெரிவுசெய்யப்பட்டன. 4-வது நாடு ஒன்றைத் தெரிவுசெய்யும் விஷயத்தில் முட்டுக்கட்டை ஏற்பட்டிருக்கிறது, ஜோர்டான் அல்லது மாலி இதற்குத் தெரிவு செய்யப்படக்கூடும்.

## டாக்டர் ஸி. பி.

புதுடில்லி, டிச. 30

இலங்கை—இந்தியா கலப்பு பல்கலைக்கழக சபைக்கு டாக்டர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

## நைஜீரிய தேர்தல்: எதிர்க்கட்சிகள் பகிஷ்காரம்

லாகோஸ், டிச. 30

நைஜீரியாவில் இன்று நடைபெற்ற பொதுத் தேர்தலை எதிர்கட்சிகள் பகிஷ்கரித்தன. நாட்டின் பல இடங்களில் கைகலப்புகள் ஏற்பட்டன.

## 4 யு. எஸ். ஜெட் விமானங்கள் வீழ்த்தப்பட்டன

வியன்டைன், டிச. 30

4 அமெரிக்க ஜெட் விமானங்களை பதட்லாவோ துருப்புக்கள் சுட்டு வீழ்த்தியதாக அறிவிக்கப்பட்டது.

## 121 வெள்ளையர் மீட்கப்பட்டனர்

லியப்போல்ட்வில், டிச. 30

காங்கோவின் வட கிழக்கு பகுதியில் அரசாங்கத்துருப்புக்கள் கிளர்ச்சிக்காரர்களிடமிருந்து 121 வெள்ளையர்களை மீட்டதாக அறிவிக்கப்பட்டது. அதற்கு முன் 25 முதல் 30 வெள்ளையர்களை கிளர்ச்சிக்காரர்கள் கொன்றுவிட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

## தென்வியட்னும்மாகாணத்தில் ராணுவச் சட்டம் பிரகடனம்

### 3 அமெரிக்க ஹெலிகோப்டர்களை வியட்காங்கியர் சுட்டு வீழ்த்தினர்

சைகோன், டிச. 30

தென்வியட்னுமின் கிழக்கு மாகாணத்தில் மூன்று மாதங்களுக்கு ராணுவச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது.

பாதுகாப்பு நடவடிக்கைக்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாய் அறிவிக்கப்பட்டது.

நேற்று சைகோனுக்கு 15 மைல் தூரத்தில் அரசாங்க காவல் நிலையம் ஒன்றை வியட்காங் துருப்புக்கள் கைப்பற்றின. கடந்த 3 தினங்களில் அவர்கள் கைப்பற்றிய 2-வது காவல் நிலையம் இது.

இங்கிருந்து 40 மைல் தூரத்திலுள்ள ஒரு நகரிலிருந்து வியட்காங் வரை விரட்டியடிப்பதில் ஈடுபட்டிருந்த அமெரிக்க ஹெலிகோப்டர்களில் 3 விமானங்களை அவர்கள் சுட்டு வீழ்த்தியதாக அறிவிக்கப்பட்டது.

## கேரளத்தில் தி. மு. க. போட்டி

எர்ணகுளம், டிச. 30

கேரள தேர்தலில் தி. மு.க. 11 ஸ்தானங்களில் போட்டியிடும் என கழகக் காரியதரிசி திரு. புருஷோத்தமன் கூறினர். கேரளத்தில் தி. மு. க அங்கத்தினர்கள் தொகை 7000.

## "அவர் சுபாஷ் போஸ் அல்ல"

புதுடில்லி, டிச. 30

தாம் சுபாஷ்சந்திரபோஸ் அல்ல என்று சௌல்மாரி ஆசிரம சந்நியாசி பலதடவை அறிவித்துள்ளார் என பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி கூறினர்.

சுபாஷ்போஸ் உயிருடன் இருக்கிறார் என்றும், சௌல்மாரி ஆசிரமத்திலுள்ள சந்நியாசிதான் சுபாஷ் என்றும் சில பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருப்பதை பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு வந்தபோது திரு லால்பகதூர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

எனினும் இவ் விஷயமாக மேற்கு வங்க முதல் மந்திரியை மீண்டும் தாம் விசாரிப்பதாக அவர் கூறினர்.

## புதிய ஜனாதிபதி

ரோமாபுரி, டிச. 30

இத்தாலியின் புதிய ஜனாதிபதி ஸெனோர்ஸெரகாத் நேற்று பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

கிரிக்கெட்

## வெற்றி தோல்வி இல்லை

கேப்டவுன், டிச. 30

ஆஸ்திரேலியாவிற்கும் தென்னாபிரிக்காவுக்குமிடையே நடைபெற்ற 2-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

**ஆஸ்திரேலியா**

முதல் இன்னிங்சில் 531 ரன்கள்.

**தென்னாபிரிக்கா**

முதல் இன்னிங்சில் 317 ரன்கள். இரண்டாம் இன்னிங்சில் 6 விக்கெட் நஷ்டத்திற்கு 336 ரன்கள்.

## 1965-ல் பாவிக்க முடியாத மோட்டார் வாகனங்கள்

### முன்னறிவிப்பு செய்வதற்கு இன்றுதான் கடைசிநாள்

யாழ்ப்பாணம், புதன்

1965ம் ஆண்டிற்கு உபயோகிக்க இயலாதென்று கணிக்கப்படும் மோட்டார் வாகனங்களின் சொந்தக்காரர்கள் கடைசி நாளான இன்று யாழ்ப்பாணம் கச்சேரியில் இதற்கான பத்திரத்தை நிரப்பிக்கொடுக்கலாம். இவ்வாறு செய்யாதிருக்கும் பழுதடைந்த மோட்டார் வாகனங்களின் சொந்தக்காரர்கள் காலக்கிரமத்தில் 1965ம் ஆண்டிற்குரிய லைசென்ஸ் கட்டணத்தைக் கொடுக்கும்படி அரசாங்க அதிபரால் கேட்கப்படுவர். அப்பொழுது வாகனச் சொந்தக்காரர்கள் லைசென்ஸ் பணத்தைக் கட்டாவிட்டால் அவர்கள்மேல் வழக்குத் தொடரப்படும். மோட்டார்வாகனத்தை 1965ம் ஆண்டிற்கு உபயோகிப்பதில்லையென்ற பத்திரத்தை இன்று நிரப்பிக் கச்சேரியில் கொடுக்கும் பழுதடைந்த வாகனச் சொந்தக்காரர்கள் 1965ம் ஆண்டு லைசென்ஸ் பணம்கட்டவேண்டியிராதென்று தெரியவருகின்றது.

## ஐ. நா. பார்வையாளர் மீது பாகிஸ்தானியர் சுட்டனர்

### பூஞ்ச் பகுதியில் சம்பவம்

புதுடில்லி, டிச 30

காஷ்மீரில் பூஞ்ச் பகுதியில் ஐ நா. பார்வையாளர்கள் மீது பாகிஸ்தான் துருப்புகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தன.

இரு ஐ நா. பார்வையாளர்கள் பாரத காவல்நிலை ஒன்றிலிருந்து மற்றொரு காவல் நிலைக்குச் சென்றபோது பாகிஸ்தான் துருப்புகள் எல்லைக்கோட்டுக்குச் சமீபத்தில் வந்து அவர்கள்மீது சுட ஆரம்பித்தனர். ஐ நா. பார்வையாளர்களுக்கு இச்சத்தம் கேட்டது.

பார்வையாளர்களைப் பாதுகாக்கும்பொருட்டு இந்தியத் துருப்புகள் பதிலுக்குச் சுட்டதில் இரு பாகிஸ்தானியர் மாண்டதாக அறிவிக்கப்படுகின்றது.

கர்சார்-சில்ஹட் எல்லையில் பாகிஸ்தான் துருப்புகள் கடந்த ஆறு தினங்களாகத் தொடர்ந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்துவருகின்றன. இதன்விளைவாக ஒருவருக்கு காயமேற்பட்டது. இரு கால்நடைகள் மாண்டன.

நேற்று ஆறுமுறை தடவை அவர்கள் சுட்டனரென்றும் அறுவடை செய்யப்பட்ட நெற்பயிரை ஒருபகுதியிலிருந்து அவர்கள் எடுத்துச்சென்றனரென்றும் அறிவிக்கப்பட்டது. திரிபுராவில் ஐயாயிரம் ரவுண்டுகளுக்குமேல் அவர்கள் சுட்டனர்.

## சீன ஆட்சேபம்

பீகிங், டிச. 30

சீனக் கடலில் போலாரிஸ் ஏவாயுதங்களுடன் அமெரிக்க நீர்மூழ்கி நடமாடிவருவது குறித்து, பசிபிக்கிற்கு மற்றோர் நீர்மூழ்கி அனுப்பவிருப்பது குறித்தும் சீன அமெரிக்காவிடம் ஆட்சேபம் தெரிவித்திருக்கிறது.

## பீகிங் குற்றச்சாட்டுக்கு டில்லி மறுப்பு

புதுடில்லி, டிச. 30

திபேத், சிங்கியாங் ஆகிய பகுதிகளில் இந்திய விமானங்கள் அத்துமீறியது என்ற குற்றச்சாட்டை இந்திய வெளிநாட்டிலாகா அதிகாரி ஒருவர் மறுத்தார். இந்திய விமானங்கள் குறிப்பிட்ட எல்லைக்கப்பால் பறக்கக்கூடாது என உத்தரவிடப்பட்டிருப்பதாயும், அதன்படியே அவை நடந்துவருவதாயும் அவர் கூறினர்.

சீனாவின் ஆட்சேபனைக் குறிப்பு அரசாங்கத்திற்குக் கிடைக்குமுன்பே அது பகிரங்கப்படுத்தப்பட்டிருப்பதிலிருந்து இது வெறும்பிரசார நோக்கை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்பதை உணரலாம் என்றும் அவர் கூறினர்.

## நாகா பேச்சு ஒத்திவைப்பு

கொஹிமா, டிச. 30

நாகா சமாதானப் பேச்சுகள் நேற்று மீண்டும் துவங்கின. தற்போதைய சண்டை நிறுத்த ஏற்பாட்டை பிப்ரவரி 6-ம் திகதிவரை நீடிப்பதென இருசாராரும் தீர்மானித்தனர். பின் அடுத்தமாதம் வரை பேச்சுக்கள் ஒத்திவைக்கப்பட்டன.

## கடற்கரையில் பிரேதம்

பருத்தித்துறை, புதன்

வேலணை கிழக்கு கடற்கரையோரமாக சென்ற 25-ந் திகதி ஒரு பிரேதம் வந்தடைந்தது. வேலணை கிழக்கு, கிராமசேவையாளர் திரு. அருணலிங்கம் ஸ்தலத்தில் நடத்திய விசாரணையின் பின் பிரேதம் சொந்தக்காரர்வசம் ஒப்படைக்கப்பட்டது. இப்பிரேதம் யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த சவிரிமுத்து தேவதாஸ் என்பவரின் பிரேதம் என அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டது.

குருவளிக் காற்றினல் பாதிக்கப்பட்டு தென்னிந்தியாவைச் சேர்ந்த அம்மாபட்டினத்தில் தஞ்சம்புகுந்த தீவுப்பகுதி மீனவர்களைப் பார்ப்பதற்கு மீனவர்களின் உறவினர் கோஷ்டியினர் நாளை அம்மா பட்டினம் புறப்படவிருக்கின்றனர். இதற்கான அனுமதிப்பத்திரத்தை அரசாங்க அதிபர் நயினாதீவைச் சேர்ந்த கந்தர் பொன்னுத்துரை என்பவருக்கு வழங்கியுள்ளார்.

## வரவேற்புத்திட்டம் கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம், வியா:

தமிழரசுக்கட்சியினர் கிளிநொச்சித் தொகுதிக்குப் பண்டிதர் கா.பொ. இரத்தினத்தை அபேட்சகராக நியமித்தபின் கிளிநொச்சித் தொகுதிக்குச் சென்றபொழுது அவருக்கு ஒரு பெரிய வரவேற்பு நடத்தக் கிளிநொச்சித் தொகுதி மக்கள் முயன்றனர்.

பல நூற்றுக்கணக்கான மக்களை இழந்தும், கோடிக்கணக்கான பொருட்களை இழந்தும் தமிழ்மக்கள் துயரக்கடலில் மூழ்கித் துடித்துக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் தமக்கு எவ்வித வரவேற்பும் வேண்டாமென திரு. இரத்தினம் கிளிநொச்சித் தமிழரசுக் கிளையினருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து வரவேற்புத் திட்டம் கைவிடப்பட்டது.

# திருக்கோணமலையில் சூருவளிவிளைத்தசேதம்

## ஆஸ்பத்திரியில் இருக்கும் பெண் கூறும் சோகக்கதை

திருக்கோணமலை, புதன்

திருக்கோணமலை—கண்டி வீதியில் வசித்துவரும் திரு. எம். எம். ஜி. வீரபாங்சா என்ற பொலிஸ் பென்ஷனியரின் மனைவியான சித்தி நசீரா (37) என்பவர் சூருவளி காரணமாக தமக்கு ஏற்பட்ட அனுபவம் பற்றித் தெரிவித்தனர்.

கொழும்பு பெரியாஸ்பத்திரியில் தலையில் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டிருக்கும் இவர் தெரிவித்துள்ளதாவது:

நாங்கள் வீட்டினுள் இருந்தபோது சூருவளி தொடங்கியது. அப்போது மரங்கள் ஒவ்வொன்றுச் சரிந்துவிழுந்து கொண்டிருந்தன. இவ்விதம் சரிந்த மரமொன்றுஎங்கள் வீட்டின் பின்பக்கத்தில் விழுந்தது. இதனுல் பின்பக்கம் சேதப்பட்டது. வீட்டிலிருந்த 16 பேரும் வீட்டைவிட்டு வெளியே ஓடி சமீபத்திலிருந்த பெரிய பாடசாலை ஒன்றில் தஞ்சம் புகுவதற்காகச் சென்றுகொண்டிருந்தோம். எனது கணவர் முன் செல்ல நான் எனது மூன்று வயதுப் புதல்வனைக் கையில் தூக்கியபடி பின்னுல் சென்று மேற்படி பாடசாலையை அடைவதற்காக விரைந்து கொண்டிருந்தபோது முதிரை மரமொன்று முறிந்து என்தலையில் விழுந்தது. இதனுல் நான் மயக்கமுற்றேன். எனது மகன் எதுவித காயமுமின்றி தப்பியபோதும் அவனும் அதிர்ச்சியினுல் சுமார் அரைமணி நேரம் மயக்கமுற்றே கிடந்தான்.

எங்கள் வீடு முற்றிலும் சரிந்து விழுந்துவிட்டதென்பதைப் பின்னர் நான் அறிந்தேன். எங்கள் உடைமைகள் எல்லாம் சேதமாகிவிட்டன.

## கட்டுப்பணம்

காங்கேசன் துறை, புதன்

காங்கேசன் துறைத் தொகுதியில் போட்டியிடும் தமிழரசுக் கட்சித்தலைவர் திரு. சா.ஜே.வே. செல்வநாயகத்தின் கட்டுப்பணத்தைக் கட்டுவதற்கு காங்கேசன்துறை மக்கள் முன்வந்துள்ளார்கள்.

### யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிடும் திரு. அ. த. துரையப்பாவின் தேர்தல் கட்டுப்பணத்தை எல்லா வட்டாரங்களிலும் உள்ள ஏழைப் பொதுமக்கள் சேகரித்து கட்டுவதென்றும், தேர்தல் செலவுக்கு நிதி சேகரிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## க்ஷயரோகத் தடுப்பு ஆலோசனைச்சபை

நல்லூர், புதன்

"க்ஷயரோகம் கர்ம நோயாகக் கணிக்கப்படுவது வழக்கமாக இருந்து வருகிறது. ஆனுல் இந்த நோயைத் தடை செய்ய மக்களைக் கிற்பிப்பதும், பிடிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்வதும் சிறந்த சிவதொண்டாகக் கருதப்பட வேண்டும்" என்று வலி-வடக்கு காரியாதிகாரி திரு. டி. முருகேசம் பிள்ளை வலி-வடக்குப் பகுதியில் க்ஷயரோக நிவாரண ஆலோசனைச் சபையை புனருத்தாரணஞ் செய்துவைத்து பேசுகையில் கூறினர்.

வலி-வடக்கில் க்ஷயரோக நிவாரண ஆலோசனைச்சபை சென்ற பல ஆண்டுகளாக இருந்து அது முறையாக இயங்காத காரணத்தால் அதனைப் புனருத்தாரணஞ் செய்யும் வகையில் விசேஷ கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது.

மகாஜனக் கல்லூரி அதிபர் திரு. தெ. து. ஜெயரத்தினம் பேசுகையில் ஆலோசனைச் சபைவசம் மூவாயிரம் ரூபாய் இருப்பதாகவும் அதனைத் தகுந்த வழியில் பயன்படுத்த வேண்டுமெனவும் கூறினர்.

சபையின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. டி. முருகேசம் பிள்ளை, உப-தலைவர். திரு. எம். சுவாமிநாதன், காரியதரிசி திரு. டி. சிவலிங்கம், தனாதிகாரி: திரு. டி. டி. ஜெயரத்தினம். 7 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

## 50 பேர் காயம்

விஜயவாடா, டிச. 30

விஜயவாடாவுக்கருகே ஏற்பட்ட ஒரு ரயில் விபத்தில் கார்டு உட்பட 50 பேர் காயமடைந்தனர்.

## பட்டினசபை பண உதவி

காங்கேசன் துறை, புதன்

காங்கேசன்துறை பட்டின சபைசார்பாகநேற்று காசோலை மூலம் பத்தாயிரத்துஎண்பதை மைலிட்டிப் பகுதியிலுள்ள சூருவளியினுல் பாதிக்கப்பட்டகடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு உணவு, மருந்துச் செலவு முதலிய தேவைகளுக்குப்பயன்படுத்துமுகமாக பட்டினசபையின் தற்காலிக காரியதரிசி திரு. பரமாநதன் உதவிப்பட்டினசபைத் தலைவர் திரு. க. கிருபாமூர்த்தியின் அனுமதியுடன் வழங்கினர்.

இப்பணத்தைமைலிட்டி சூருவளிநிதி நிவாரணசங்க தனாதிகாரி திரு. கைலாயநாதனிடம் வழங்கப்பட்டது. இவ்வைபவத்தில் திரு. ச. சிவனடியார் கலந்து கொண்டார்.

## ரயில் — லொறி மோதல்

சாவகச்சேரி, புதன்

மிருசுவில் புகையிரத நிலயத்திற்கருகாமையில் உள்ள பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையைக் கடக்க முயற்சித்த லொறி ஒன்று கொழும்பிலிருந்து வந்த யாழ்தேவியுடன் மோதியதால் லொறியில் இருந்த சர்க்கரை, மாவு முதலிய பொருட்களும் லொறியும் பலத்த சேதத்துக்குள்ளாகின லொறிச் சாரதியும் மற்றையோரும் மயிரிழையில் உயிர் தப்பினர்.

## பிரதமருக்கு தமிழாசிரியர் மகஜர்

கொழும்பு, புதன்

தலைமை ஆசிரியர்களும் உதவி தலைமை ஆசிரியர்களும் சிங்களத்தில் தேர்ச்சி பெற வேண்டுமெனத் தெரிவிக்கும் திறைசேரியின் 618-வது இலக்க ஷரத்தை வாபஸ்பெறுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பிரதமரைக் கேட்டுக்கொள்ளும் மகஜரொன்றை அகில இலங்கை அரசாங்க தமிழாசிரியர் சங்கம் பிரதமருக்கு அனுப்பிவைத்துள்ளது


REGAL — JAFFNA
NOW SHOWING
Joel Mccrea
in
Alfred Hitchcock's
FOREIGN
CORRESPONDENT

ராஜா சினிமா
(சுழிபுரம்)
கல்யாணகுமார்-தேவிகா
நடிக்கும்
நெஞ்சில் ஓர் ஆலயம்

ஸ்ரீ மனோகரா
(யாழ்ப்பாணம்) போன் 485
புனிதவதி
9-30 மட்டு .
ஷோலா ஒர் ஷப்னம்
(ஹிந்தி)

அவள் எழிலரசி . . . அவள் பொண்ட்ஸ் பாவிக்கிருள்



அழகினுக்கு அழகு செய்து சௌந்தர்ய தேவதையாக இலங்க உதவுவது
பொண்ட்ஸ் வனிஷிங் கிரீம்
பொண்ட்ஸ் முகப் பவுடர்.




உங்கள் பட்டு மேனியில் பொண்ட்ஸ் வனிஷிங் கிரீமைப் படர விடுங்கள் - பவுடர் பூசுமுன் தடவும் தைலமிது. செழுமை நிறைந்தது, ஆனுல் கசிவற்றது. பொண்ட்ஸ் வனிஷிங் கிரீமை உங்கள் சருமம் உவப்புடன் ஏற்கிறது. சருமவடுக்களை மறைத்து, உங்கள் எழில் வதனத்திற்கு மெல்லினிய அழகொளி ஊட்டுகிறது. பவுடரை மணிக்கணக்கில் இது அழியாமல் சமமாக வைத்திருக்கிறது.




பின்பு, உங்கள் சருமத்திற்கு அழகு மெருகூட்ட தோகை போன்ற மிருதுவான பொண்ட்ஸ் முகப் பவுடரைப் பூசுங்கள் பல வர்ணங்களில் இது வருகிறது. பரிபூரணமாகக் கலக்கிறது. திரளாமல் படருகிறது. நாள் முழுமையும் புத்துணர்ச்சி அளித்து சமமாக இருக்கிறது

அதன் பின் நீங்கள் அழகினுக்கு
அழகு செய்யப்பட்ட சௌந்தர்ய தேவதையாக இலங்குவீர்கள்!

JWT-P-28

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி — பினாஸா
(கொழும்பு) (வெள்ளவத்தை)
மற்றும் 4 திரைகளில்
நடிகர்திலகம்
சிவாஜிகணேசன்
கொடைவள்ளல் கர்ணனாக நடிக்கும்
பத்மினி பிக்சர்ஸ்
கர்ணன்.

5-வது மகத்தான வாரம்!
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தீந்தமிழால் இறைவனைப் பாடி, தெவிட்டாத
பிரபல பின்னணி பாடகர்
டி. எம். சௌந்தரராஜன்
நடிக்கும்
பட்டினத்தார்
சங்கீதம்: ஜி. ராமநாதன் — டைரக்ஷன் கே. சோமு

# அரசியல் புயலும்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மர்கள் மகாநாட்டில் கலந்து கொண்ட இலங்கைப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா நாடு திரும்பினர்.

ஜூலை. 29: டாக்டர் என். எம். பெரேரா தமது முதலாவது வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்தார்.

ஜூலை. 30: நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேரா மெது பட்ஜட் யோசனைகளை தவிர்த்துவிட்டார்.

## ஆகஸ்ட்

ஆக. 6. புரட்சிச் சதிவழக்கில் 7வது எதிரி பி எஸ், ஏபிரகாம் விடுதலைசெய்யப்பட்டார்.

ஆக. 14. பட்ஜட் 88-40 வாக்குகளால் நிறைவேறியது.

ஆக. 28. பத்திரிகைச் சபை ஒன்றை அமைப்பதென்று இன்று கூடிய மந்திரிசபை தீர்மானித்தது.

## செப்டம்பர்

செப். 11 இலங்கை-இந்தியர் பிரசினை சம்பந்தமாக இரு நாட்டுப் பிரதமர்களும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யுமுகமாக இந்திய வெளிவிவகார மந்திரி திரு. சுவர்ண்சிங் கொழும்பு வந்து சேர்ந்தார்.

செப். 25. பத்திரிகை நகல் மசோதா பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட்டது.

## அக்டோபர்

அக். 1. புரட்சிச் சதிவழக்கில் நான்கு எதிரிகள் விடுதலை.

பத்திரிகை மசோதா செனட் சபையில் நிறைவேற்றப்பட்டது.

அக். 6. அடுத்த வருடத்துக்கு (1965) முன்னர் பத்திரிகை மசோதா ஜனப்பிரதிநிதிகள் சபைக்கு கொண்டுவரப்படமாட்டாதெனச் சபாநாயகர் அறிவித்தார்.

அக்டோபர் 15- லேக்ஹவுஸ் பத்திரிகை மசோதா ஜனப்பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

## நவம்பர்

நவம்பர் 6- பத்திரிகை கூட்டுஸ்தாபன மசோதா, அரசாங்க கட்சியினரோ, எதிர்க்கட்சியினரோ எதிர்பாராத விதமாக, ஜனப்பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு மணி நேரத்தில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு 85-26 வாக்குகளால் நிறைவேறியது.

நவம்பர் 9- யாழ்ப்பாணம் கச்சேரியில் முதல் தடவையாக ஒரு எழுதுவினைஞருக்கு கட்டாய ஓய்வு வழங்கப்பட்டது.

நவம்பர் 11- யாழ்ப்பாணம் பஸ்நிலையத்தில் அநுராதபுரத்துக்கும் யாழ்ப்பாணத்துக்கு மிடையில் சேவை செய்து வந்த 'எக்ஸ்பிரஸ்' ஸ்ரீ பஸ் தீப்பிடித்துக்கொண்டது

நவம்பர் 12- அரசாங்ககட்சியைச் சேர்ந்த இரு எம். பி.க்களான திருவாளர்கள் ஷெல்டன் ரணராஜாவும், ஸ்டான்லி மொலகொடையும் எதிர்க்கட்சியில் சேர்ந்தனர்

நவம்பர் 13- யாழ்ப்பாணத்துக்கு ஐந்து புதிய சிங்கள ஸ்ரீ எழுத்து பொறிக்கப்பட்ட இலக்கத் தகடுகளையுடைய பஸ்கள் வந்தன.

## டிசம்பர்

டிசம்பர் 1- இலங்கைப் புகையிரதச் சேவையின் 100-வது ஆண்டுவிழாவை முன்னிட்டு கண்காட்சிப் புகையிரதத்தைப் பிரதமர் திருமதி பண்டாரநாயகா ஆரம்பித்துவைத்தார்.

டிசம்பர் 4- பார்லிமெண்டின் சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றிதெரிவிக்கும் பிரேரணை தோல்வியுற்றதைத் தொடர்ந்து இலங்கையின் 5-வது பார்லிமெண்டைக் கலைக்கும்படி பிரதமமந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா கவர்னர்ஜெனரலிடம் சிபார்சு செய்யத் தீர்மானித்தார்.

டிசம்பர் 17- நள்ளிரவு பார்லிமெண்ட் கலைக்கப்பட்டது.

டிசம்பர் 22- வடக்கு,கிழக்கு மாகாணங்களில்மழையுடன்பலத்த புயல்காற்று வீசியது. இதனல் பெருமளவில் உயிர்ச்சேதமும் உடைமைச்சேதமும் ஏற்பட்டன.

டிசம்பர் 28- புயலால் பாதிக்கப்பட்ட வடக்கு,கிழக்கு மாகாணங்களில் நிலைமையை நேரில் கண்டறிய கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லாவ இப்பகுதிகளுக்கு விஜயம்செய்தார்.

# நீதிமன்றங்களில் சிங்களம்

கொழும்பு, புதன்

அடுத்தவருடம் ஜனவரி முதல் திகதியிலிருந்து சிங்களம் பேசும் மக்களைக்கொண்ட கிராமப்புற நீதிமன்றங்களில் சிங்களத்தில், அலுவல்களை நடத்தப்படுவதற்கான நடவடிக்கையை நீதிமந்திரி திரு. ஜி. சி. டி. ஏ. டி' சில்வா மேற்கொண்டுள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள கிராமப்புற நீதிமன்றங்களில் அலுவல்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் தொடர்ந்து நடைபெற்றுவரும்.

# ரயில்சேவை

கொழும்பு, புதன்

முருங்கனிலிருந்து மன்னார் வரையான புகையிரத சேவை அடுத்தவருடம் ஜனவரி 4-ம் திகதியிலிருந்துதான் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை

# பட்டினசபைத் தலைவராக கிருபாமூர்த்தி தெரிவு

காங்கேசன் துறை,புதன்

காங்கேசன்துறைப் பட்டின சபைத்தலைவராக திரு. க.கிருபாமூர்த்தி இன்று ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். முன்னை நாள் பட்டினசபைத் தலைவர் திரு. மு. திடவீரசிங்கம் இவரது பெயரைப்பிரேரித்தார். திரு. ச. சிவனடியார் ஆமோதித்தார்.

தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட திரு க கிருபாமூர்த்தி நன்றி தெரிவித்துப் பேசுகையில் தன்னைப்பட்டின சபைத் தலைவராகத்தெரிவுசெய்ததற்கு தன் சார்பிலும் தன் குடும்பத்தின் சார்பிலும் நன்றி தெரிவித்தார்.

சூறவளியினல் உயிரிழந்த மயிலிட்டி மக்களுக்காக ஒரு மாத காலம் துக்கம் அனுஷ்டிப்பதென்று பட்டின சபை தீர்மானித்தது. கறுப்புக்கொடி ஒன்றை சபைக்கட்டிடத்தின் மீது முன்னை நாள் பட்டின சபைத்தலைவர் உயர்த்திவைத்தார்.

# கொலை, கடத்தல் வழக்கில் சம்பந்தப்பட்ட மோட்டார் கார் சொந்தக்காரரிடம் கொடுக்க நீதிமன்றம் மறுப்பு

சாவகச்சேரி, புதன்

இராமநாதபுரம் கொலை, கடத்தல் வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் நேற்றுக்காலை நீதிபதி திரு. ஞபேர்ட்சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட மோட்டார் காரை, சொந்தக்காரரிடம் ஒப்படைக்கும்படி நீதிபதியிடம் விண்ணப்பம் செய்யப்பட்டது. இந்த விண்ணப்பத்தை வழக்கறிஞர் திரு. ரி. கனேசலிங்கம் ஆட்சேபித்து, கொலைவழக்கில் இந்தக் காரும் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு பொருளாக இருப்பதாகக் கூறினர். நீதிபதி ஆட்சேபத்தை ஏற்றுக் கொண்டு மோட்டார்காரை இவ்வழக்கு விசாரணை முடியும்வரை பொலிஸ் பாதுகாப்பில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

இவ்வழக்கில் வட்டுக்கச்சியைச் சேர்ந்த வி தனுஷ்கோடி, வி நடராசா, கே. குணசிங்கம், வி. சண்முகம், ஜே. ஞானப்பிரகாசம், ஜோ. வரப்பிரகாசம், ஆர் கந்தையா ஆகிய 7 பேர்மீதும் சட்டவிரோதமாகக் கூட்டம் கூடி வைரவநாதன் ஆறுமுகம் என்பவரின் வீட்டிற்குள் நுழைந்து அவரைக் குத்திக் கொலை செய்ததாகவும் அவரது மகள் பூரணத்தைப் பலவந்தமாகக் கடத்திச் சென்று கெடுத்ததாகவும் கிளிநொச்சிப் பொலிஸாரால் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

1-ம், 2-ம் எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு. எம். பாலசுந்தரம் வழக்கறிஞர் திரு. வி. என். நவரத்தினத்தினத்தின் உதவியுடனும், திரு. ஆர். டி. சிவகுருவின் அனுசரணையுடனும், 3-ம் எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு. வி. என். நவரத்தினம் திரு. ஆர். டி. சிவகுருவின் உதவியுடனும், 4-ம், 5-ம், 6-ம் எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு. ரி. கணேசலிங்கம், திரு. வி. செல்லத்தம்பியின் அனுசரணையுடனும் ஆஜரானர்கள்.

சங்கரன் வேலாயுதர் சாட்சியமளித்தபோது கூறியதாவது:

"சண்டிலிப்பாயிலுள்ள கராச்சில் நான் மெக்கானிக்காக இருக்கிறேன். இவ்வருடம் அக்டோபர் 6ந் தேதி நான் கராச்சில் வேலைசெய்துகொண்டிருந்தேன். மோட்டார் காரொன்றை கராச்சிற்கு சுப்பிரமணியம் என்பவர்கொண்டு வந்தார். அப்பொழுது காலை 7-30 மணியிருக்கும். காரின் முன்புறக் கண்ணாடி உடைந்திருந்தது. நான வேறு கண்ணாடியைப் போட்டுக்கொடுத்தேன்."

திருநாவக்கரசு ஆறுமுகமும், பொலிஸ்கான்ஸ்டபிளும் சாட்சியமளித்தார்கள்.

மேல்விசாரணை ஜனவரி 4ந் தேதிவரை ஒத்திப்போடப்பட்டுள்ளது.


## வரி விளம்பரம்

### தேவை

எமது "மெரிலாண்ட்" இன்டஸ்ரீஸ் ஸ்தாபனத்தில் கடமையாற்ற மனேஜர், கஷியர், பிரதிநிதிகள் தேவை. பிணைப் பணம் கட்ட வேண்டும். 12-1-65 க்கு முன் விண்ணப்பிக்கவும். C/o. ஈழநாடு. 1383

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கோவில் வீதியில் (Temple Road) வீடு கட்டுவதற்கு சிறந்த இரண்டு பரப்பு காணி, புதிய நல்ல தண்ணீர் கிணற்றுடன். விபரம்: இரத்தினசிங்கம்,29-4-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 1378

கொடிகாமம் புகையிரதநிலையம், சந்தையிலிருந்து 200 யாருக்குள் மா, பலா, தென்னை பனை, கிணறு உள்ள 20 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. வி. என். சோமசுந்தரம், நகரசபை, சாவகச்சேரி. 1384

### வாடகைக்கு

கோண்டாவில் கிழக்கு தபாற்கந்தோர், புகையிரத நிலையம், பள்ளிக்கூடம், பஸ்ஸ்ராண்ட் முதலியவற்றுக்கு அருகாமையில் சகல வசதிகளுடனும் கூடிய வீடும், 10 பரப்புக் காணியிலிருக்கும் சகல வரும்படிகளும் வாடகைக்குக்கொடுக்கப்படும். எஸ். ரி. கனகலிங்கம், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். 1385

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம், மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50. நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணநந்தர் கைலாயபிள்ளையார்கோவிலடி யாழ்ப்பாணம்.


# குமாரசாமிக்கு வரவேற்பு

பரந்தன், புதன்

கிளிநொச்சித் தொகுதியில் சுயேச்சை அபேட்சகராகப் போட்டியிட முன்வந்திருக்கும் முன்னள் சாவகச்சேரி எம்.பி. திரு. வே. குமாரசுவாமிக்கு அத்தொகுதி வாக்காளர்களால் ஜனவரி முதலாம் திகதி வெள்ளிக்கிழமை மாலை பரந்தனிலும் கிளிநொச்சியிலும் வரவேற்பு அளிக்கப்படவிருக்கிறது.

கிளிநொச்சி சந்தையில் ஓர் பொதுக்கூட்டமும் பரந்தன் சந்தியில் மற்றொரு பொதுக்கூட்டமும் நடைபெறும்.




மைல் கணக்காக நடக்கவும், மணித்தியாலங்களாக நிற்கவும், மலர் இதழ் போன்ற, பஞ்சு மெத்தை

சொகுசுள்ள இலஸ்டோ காலணிகள் அணியுங்கள்.

இலஸ்ட்டோ காலணிகள் அணிவதனல் பாத எரிச்சலின்றி வெகு தூரம் நடக்கவும், பல மணித்தியாலங்கள் நிற்கவும் இயலுகிறது. சோர்வுற்ற பாதங்களுக்கு மலர் இதழ் போன்ற, பஞ்சு மெத்தை சொகுசுள்ள இலஸ்ட்டோ காலணிகள் பாதங்களுக்கு குளுமையும், சௌகரியத்தையும் அளிக்கின்றன. இலஸ்ட்டோ காலணிகளை கேட்டு வாங்குங்கள். காற்றைப்போல் கனக்குறைவான இலஸ்ட்டோ காலணிகள் வளையுந்தன்மையுடையவை, நீடிய பாவனைக்கு உத்தரவாதம் பெற்றவை.




இலஸ்டோ போம்ட்ரெட்ஸ்

# காளிமுத்து கொலை வழக்கில் எதிரிகளுக்கு மரண தண்டனை

கொழும்பு, புதன்

காளிமுத்து கொலைவழக்கில் மூன்று எதிரிகளுக்கும், கொழும்பு அஸைஸ் கமிஷனர் திரு. வி. சிவசுப்பிரமணியம், நேற்று ஜூரிசபையினரின் முடிவை ஏற்றுக்கொண்டு மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். எதிரிகள் குற்றவாளிகள் என ஜூரிகள் ஏகமனதாக முடிவுசெய்தனர்.

இவ்வழக்கில் பிரபல வர்த்தகரும், பந்தயக் குதிரைகளின் சொந்தக்காரருமான கே. காளிமுத்து அல்லது காளியப்பன் என்பவரை கடந்த வருடம் ஜூன் மாதம் 13-ந் திகதி கொலைசெய்ததாக எஸ். எஸ். பிச்சை, எம். எஸ். எம். மர்சூக், என். ஜூலியன் பெர்னாண்டோ ஆகிய மூவர் மீதும் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

1-ம், 2-ம் எதிரிகள், காளிமுத்துவின் சகோதரர் கே. நாகலிங்கத்தையும், அவரது கார் சாரதி தர்மதாசாவையும் கொலைசெய்ய முயற்சித்தார்கள் என்ற குற்றச்சாட்டிலும் குற்றவாளிகளாகக் காணப்பட்டனர்.

1-ம் எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு. கே. சி. கமலநாதன், திரு. அனில் ஒபயசேகராவின் உதவியுடனும் திரு ஏ. மகேசனின் அனுசரணையுடனும் ஆஜரானர். 2-ம் எதிரி சார்பில் வழக்கறிஞர் ஸரான்வி திலகரத்ன திரு. நிகால் ஜெயவிக்கிரமாவின் உதவியுடனும் திரு. ஏ. ஏ. எம். சலீலின் அனுசரணையுடனும் ஆஜரானர். 3-ம் எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு எம். டி. கே. குலத்துங்கா, திரு. நிகால் ஜெயவிக்ரமாவின் உதவியுடனும் திரு. ஏ. மகேசனின் அனுசரணையுடனும் ஆஜரானர். முடிக்குரிய தரப்பில் வழக்கறிஞர் சின்னத்தம்பி ஆஜரானர்.

வழக்காளி தரப்பில் கூறப்பட்டதாவது: சம்பவம் நடந்த தினம் 1-ம் எதிரி காலை 4-30 மணிக்கு காளிமுத்துவின் வீட்டிற்கு சென்று ஐம்பது ரூபா கேட்டார். காளிமுத்து மறுத்தபோது 1-ம் எதிரி அவரை பயமுறுத்திவிட்டுச் சென்றர்.

அன்று மாலை 7-30 மணிக்கு 1-ம் எதிரி மற்றும் இரு எதிரிகளுடன் காளிமுத்துவின் வீட்டிற்கு சென்று அவரை வாளாலும் கத்திகளாலும் தாக்கினர்கள். காளிமுத்துவின் கார் சாரதி தர்மதாசாவையும் எதிரிகள் தாக்கினர்கள். காளிமுத்துவின் சகோதரர் நாகலிங்கம் சம்பவம் நடந்த இடத்திற்கு வந்தபோது, எதிரிகள் அவரையும் தாக்கினர்கள்.

இச் சம்பவத்தினால் காளிமுத்துவின் உடம்பில் 16 காயங்கள் ஏற்பட்டன. ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபின் காளிமுத்து காலமானர். காளிமுத்துவின் சகோதரரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சுகமடைந்தார்.

## வவனியாவில் கம்யூ. அபேட்சகர்

யாழ்ப்பாணம், வியாழன்

ஆசிரியர்களுக்கும் சில பிரிவு அரசாங்க ஊழியர்களுக்கும் அரசியல் உரிமை வழங்கப்பட்டால் திரு. வி. பொன்னம்பலம் வவனியாத் தொகுதியில் கம்யூனிஸ்ட் கட்சி அபேட்சகராக பொதுத் தேர்தலில் போட்டியிடுவார்.

## ஈமச்சடங்கில் மேளமில்லை!

யாழ்ப்பாணம், வியாழன்

தமிழர்களின் மரணச் சடங்குகளிலெல்லாம் தொன்று தொட்டு வழங்கிவந்த முக்கிய அம்சமான சாப்பறை இன்றியே ஒரு மரணச்சடங்கில் சகல கிரியைகளும் நடத்தி வைக்கப்பட்ட சம்பவம் சங்கானையில் நிகழ்ந்துள்ளது. சங்கானையில் ஒரு மரணச்சடங்கில் பறைமேளத்திற்குப் பதிலாக தோத்திரப் பாடல்களுடனும், சங்கு, சேமக்கலத்துடனும் சடங்குகள் நடைபெற்றன.

பறைமேளமின்றியே மரணச் சடங்குகள் நடத்துவதென்று அண்மையில் சங்கானைக் கிராமத்தவர் பலர் கூடித் தீர்மானித்திருந்தனர்.

## நவநீதகிருஷ்ண பாரதி நினைவுவிழா

யாழ்ப்பாணம், வியா

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் மேலைவீதியில் இன்று பிற்பகல் பண்டிதமணி க. அ. நவநீதகிருஷ்ண பாரதியாரது பத்தாம் ஆண்டு நினைவுவிழா நடைபெறும். பரமேஸ்வராக் கல்லூரி அதிபர் திரு. சி. சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பண்டிதர் க. நாகலிங்கனர், பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, பண்டிதர் கந்தையனர், பண்டிதர் க. சச்சிதானந்தன் ஆகியோர் உரை நிகழ்த்துவர்.


‘ஈழநாடு’

தினக்குறிப்பு

1965

விற்பனையாகின்றது

விலைரூபா 1-50.


## 200 குடும்பங்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தீவுகளில்தான் மீனவர்கள் பெருமளவில் வசிப்பதால் இங்கு அதிக உயிர்ச்சேதமேற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இந்தத் தீவுகளில் வாழும் மீனவர்கள் வழக்கமாக பிரதான பகுதிக்கு தங்களுக்குத் தேவையான உணவுப்பொருட்களை வாங்க வருவார்கள் என்றும் ஆனல் சூருவளி வீசியதற்குப் பின்னர், இவர்கள் குறிப்பிட்ட இடத்திற்குச் செல்லவில்லையென்றும் அரசாங்கத்துக்குக் கிடைத்த தகவல்கள் கூறுகின்றன,

### போக்குவரத்து தடை நீங்குகிறது

அண்மையில் ஏற்பட்ட பயங்கர சூருவளியினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு பகுதிகளில் மன்னர் தவிர்ந்த ஏனைய இடங்களில் போக்குவரத்து தடைகள் நீங்கிவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மன்னருக்கு செல்லும் பாதையில் மன்னர் நகரிலிருந்து இரண்டுமைல் தூரம் வரை மோட்டாரில் செல்லலாம் என்றும் அங்கிருந்து பின்னர் படகு மூலமே செல்ல முடியுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், அனுராதபுரம், வவனியா, திருகோணமலை பிரதான வீதிகளில் போக்குவரத்துக்கு தடைகள் இல்லை.

### பாடசாலைகள் திருத்தப்படும்

சூருவளி கொடுமையினால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஏராளமான பாடசாலைகள் தரைமட்டமாகியுள்ளன, ஏராளமான பாடசாலைகள் அதிக சேதமடைந்திருக்கின்றன. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சூருவளியினால் பாதிக்கப்பட்டு சேதமுற்றுள்ள பாடசாலைகளை திருத்துவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது. சேதமுற்ற பாடசாலைகளைத் திருத்தும் வேலைகள் உடனடியாக ஆரம்பமாகும் என்று அரசாங்க அதிகாரியொருவர் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு தென்னிலங்கையிலுள்ள பல ஸ்தாபனங்களின் கோஷ்டிகள் உணவு, உடைகள் முதலியன கொண்டுவந்து வழங்கிவருகின்றன,

திருக்கோணமலைத் துறைமுகத்தைச் சீராக்கும் வேலைகளும் ஆரம்பமாகிவிட்டன.

சூருவளியினால் பாதிக்கப்பட்டு அல்லலுறும் மக்களிடம் எஞ்சியுள்ள பொருட்களையும் விஷமிகள் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாகவும் கூறப்படுகிறது.

## நடேசபிள்ளை போட்டியிடமாட்டார்

யாழ்ப்பாணம், வியா.

செனட்டர் சு. நடேசபிள்ளை பொதுத்தேர்தலில் போட்டியிடமாட்டார். தாம் சுயேச்சையாகவோ கட்சிசார்பிலோ எந்தத்தொகுதியிலும் போட்டியிடப்போவதில்லையென அவர் திட்டவட்டமாகத் தெரிவித்தார், "தேர்தலில் நான் போட்டியிட இருப்பதாக வெளிவந்த செய்தி ஆதாரமற்றது" என்று திரு. நடேசபிள்ளை நேற்று அறிவித்தார்.

## மந்திரியைச் சந்திக்கச் சென்றர்

யாழ்ப்பாணம், வியாழன்

சூருவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி வழங்குவது சம்பந்தமாக சமூக சேவா அமைச்சரைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக முன்னுள் யாழ்ப்பாணம் எம். பி. ஏ. ரி. துரையப்பா கொழும்புக்குச் சென்றர்,

மயிலிட்டியில்

# உயிரிழந்த மீனவர்களின் குடும்பங்களுக்கு நன்கொடை

நல்லூர், வியாழன்

மயிலிட்டிக் கரையோரங்களில் கடலில் உயிரிழந்த மீனவர்களின் குடும்பங்களுக்கு பத்தாயிர ரூபா பெறுமதியான பொருட்களை கொழும்பு இரட்சணிய சேனையினர் வழங்கியுள்ளனர்.

நேற்று முன்தினம் கொழும்பிலிருந்து வந்த லொறியில் 250 மீனவர் குடும்பங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள், உடைகள், குழந்தைகளுக்கான பால் உணவு வகைகள் என்பன வந்து சேர்ந்தன.

காங்கேசன்துறை முன்னுள் எம். பி திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் மயிலிட்டிக் கரையில் கஷ்டமுறும் மக்களை நேரிற் சென்று பார்த்து ஆறுதல் அளித்துள்ளதுடன் நிவாரணமளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகவும் உறுதி அளித்துள்ளார்.

## யோகிராமையா இன்று வருகிறர்

யாழ்ப்பாணம், வியாழன்

இலங்கை கிரியா பாலாஜி யோக சங்க ஸ்தாபகர் யோகி எஸ். ஏ. ஏ. ராமையா இன்று காலை யாழ்ப்பாணம் வந்து சேர்கிறர்.

கொழும்பு, அனுராதபுரம், கண்டி முதலிய இடங்களுக்கு விஜயம் செய்து பின் இன்று காலை யாழ்ப்பாணம் வரும் அவரை ரயில் நிலயத்தில் வரவேற்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

ஐந்து தினங்கள் இங்கு தங்கியிருக்கையில் இவர் இந்துக்கல்லூரி மண்டபத்தில் இலவசயோகாசன வகுப்புக்கள் நடத்துவார்.

## சத்தியாக்கிரக வழக்கு

### 20-ம் திகதிக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வியா.

சத்தியாக்கிரகவழக்கில் முதலாம் பிரதிவாதி திரு. ஏ. அமிர்தலிங்கத்திற்கும், 2-ம் பிரதிவாதி டாக்டர் ஈ. எம். வி. நாகநாதனுக்கும் கட்டளை வழங்கப்படாததால் நீதிபதி வழக்கை ஒத்திவைத்து மீண்டும் 1-ம், 2-ம் பிரதிவாதிகளுக்குக் கட்டளைவழங்கும்படி உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் திரு. டி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் நேற்றுக் காலை சத்தியாக்கிரக வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, 4-ம் பிரதிவாதி திரு. தர்மலிங்கம், 5-ம் பிரதிவாதி புரக்டர் நடராசா ஆகியோர் மட்டுமே வந்திருந்தனர். 3-ம் பிரதிவாதி திரு. வி. ஏ. கந்தையா காலமாகிவிட்டார். எதிரிகளுக்காக எவரும் ஆஜராகவில்லை,

மீண்டும் இவ்வழக்கு 65-ம் ஆண்டு ஜனவரி மாதம் 20-ம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## அளவெட்டியில் பஸ் சேவை

யாழ்ப்பாணம், வியா

அளவெட்டியில் புதுரோட் வரை ஜனவரி 2ந் தேதிமுதல் இ. போ. சபை பஸ்சேவை ஒன்றை ஆரம்பிக்கவிருக்கின்றது. அளவெட்டி புதுரோட்டில் பஸ் பிரயாணிகள் தங்குவதற்கென அளவெட்டி பலநோக்குச் சங்கம் ஒரு தங்குமிடத்தை அமைத்[illegible] இதன் திறப்புவிழாவும் [illegible]டாந் தேதி நடைபெறவிருக்கிறது. அப்பொழுது அங்கு திரு. வி. பொன்னம்பலத்தின் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜயவீரா இ. போ. ச. பிரதேச மனேஜர், என்ஜினியர் நடேசன் ஆகியோர் கலந்துகொள்வர்.

## புதிய தமிழ் டாக்டர்கள்

கொழும்பு, புதன்

வைத்தியக்கல்லூரி இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்தோர் பட்டியல் இன்று வெளியிடப்பட்டது. பல்கலைக்கழக செனட்டினால் இப்பட்டியல் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. பரீட்சையில் சித்தியடைந்து டாக்டர்களாக வெளியேறும் தமிழ் மாணவர் விபரம் வருமாறு:-

எஸ். பாலகிருஷ்ணன், எஸ் பாஸ்கரநாதன், ஜி ஜே. எஸ்., பெனடிக்ட், எஸ் எச். ஏ. காதர், கே. எஸ். ஜெயதேவன், எஸ். ரி. காசிநாதன், ஜே. பி. மாணிக்கசிங்கம், வி. ஏ பிலிப்பையா, வி ராஜரத்தினம்,, எஸ். எஸ் எச்ஸ், இராசையாபிள்ளை, வி. சண்முகநாதன், எம். சிவநேசன், ஏ. சிவசுந்தரம், கே. தனபாலன, எம் ஜி. வேதமுத்து.

ஞானசித்தி:- வீ. ரி. மத்தேயு (வைத்தியம், அறுவை சிகிச்சை), எஸ், ஜே. வை, செபஸ்தியாம்பிள்ளை (வைத்தியம்) வி. ஏ. டி. ஈ, பற்றிக் (வைத்தியம்), என். விவேகானந்தன் (வைத்தியம்)

## இறுதிச் சந்தர்ப்பம்

கொழும்பு, வியாழன்

பதுக்கி வைத்திருக்கும் ரொக்கப் பண விபரங்களை அரசாங்கத்திற்கு அறிவிக்கும் இறுதித் தினம் இன்றுமாலை 4-30 மணியுடன் முடிவடைகின்றது. கடந்த சில தினங்களாக இந்த விபரங்களை அரசாங்கத்திடம் தெரிவிப்பதற்காக பல வர்த்தகப் பிரமுகர்கள் முயற்சி செய்து கொண்டிருந்தனர். இப்படியான சந்தர்ப்பத்தை விட்டால் பின்னர் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தாததற்காகத் தாம் வருந்த வேண்டியிருக்கும் என பல கணக்காளர்கள் தாம் தொடர்பு கொண்டுள்ள வர்த்தகர்களிடம் அபிப்பிராயம் தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது.

இந்தத் திட்டம் நிதி மந்திரி டாக்டர் என். எம். பெரேராவினால் இந்த ஆண்டு கொண்டு வரப்பட்டது.

## விவசாயிகளுக்கு பண உதவி

நல்லூர், வியாழன்

வலிகாமம் வடக்கில் சூருவளிக் காற்றினால் விவசாயிகளுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு நிவாரணமளிக்கும் வகையில் அரசாங்க உதவியின்றி கஷ்டப்படும் ஏழை விவசாய பொது மக்களுக்கு வலி-வடக்கு காரியாதிகாரி கந்தோரில் பணஉதவி அளிக்கப்பட்டு வருகின்றது.

வலி-வடக்கில் உள்ள 21 கிராமங்களிலும் அரசாங்க உதவியின்றி கஷ்டப்படும் ஏழை மக்களுக்கு பணஉதவி நேற்றுத் தொடக்கம் அளிக்கப்படுகிறது. அரசாங்க உதவி இல்லாவிட்டால் பட்டினி நிலைமை அடையக் கூடியவர்களுக்கே முதலில் நிதி அளிக்கப்படுகிறது.

இரண்டொரு மாதங்களுக்கு இவர்களுக்கு இவ்வாறு உதவி அளிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. வீட்டுச் சேதம், பயிர்ச்சேதம் அடைந்தோருக்கும் ஆரம்பத்தில் இயன்ற உதவி விரைவில் வழங்கப்படுமெனத் தெரிகிறது.

மயிலிட்டிக் கரையில் ஏற்பட்டுள்ள பயங்கரமான சேதத்திற்கு பலவகையிலும் உதவி அளிப்பதற்கு பல பொது ஸ்தாபனங்கள் முன்வந்துள்ளன. உணவு, உடை முதலான பொருட்கள் பல இடங்களிலிருந்தும் அனுப்பப்படவிருக்கின்றன.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.